# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 06 | பாடம் : சைவநெறி I, II | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பெயர் / சுட்டெண்** :.........................................................................................................

### பகுதி I

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01) ஓங்கார வடிவினராகத் திகழ்பவர்
1. சிவபெருமான் 2. முருகன் 3. விநாயகர் 4. திருமால்

02) சைவ இல்லங்களில் தெய்வ வணக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட இடம்
1. சமையலறை 2. அலுவலக அறை 3. சுவாமி அறை 4. களஞ்சிய அறை

03) "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர்
1. திருவள்ளுவர் 2. ஔவையார் 3. நாவுக்கரசர் 4. திருமூலர்

04) "நன்றி மறவாமை" என்ற கதையைக் கூறியவர்
1. வியாசர் 2. நாவலர் 3. பாரதியார் 4. சூதமுனிவர்

05) "இடரினுந்தளரினும்" எனத் தொடங்கும் தேவாரத்தின் பண்
1. இந்தளம் 2. காந்தாரபஞ்சமம் 3. பஞ்சமம் 4. கொல்லி

06) விநாயகரை அருட்சிக்க மிகவும் உகந்தது
1. வன்னி 2. நொச்சி 3. அறுகம்புல் 4. வில்வம் இலை

07) தேவர்களின் அரசன்
1. வருணன் 2. இந்திரன் 3. பிரமன் 4. குபேரன்

08) விபூதியைப் பரவிப்பூசுதல்
1. ஒரு விரலால் பூசுதல் 2. திரிபுண்டரம் 3. இரண்டுகுறி பூசுதல் 4. உத்தூளனம்

09) தரும புத்திரர் செய்த யாகம்
1. வேள்வியாகம் 2. இராஜசூயயாகம் 3. அஸ்வமேதயாகம் 4. இந்திரயாகம்

10) மெய்மை (உண்மை பேசுவோம்) என்ற கதை இடம் பெறும் நூல்
1. முதலாம் பாலபாடம் 2. சைவவினாவிடை
3. இரண்டாம் பாலபாடம் 4. கந்தபுராணக்கதை

(10 × 2 = 20 புள்ளிகள்)

❖ **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| **1.** தோப்புக்கரணம் | நன்றிமறவாமை |
| **2.** சிவசின்னங்கள் | சிவபெருமான் |
| **3.** வெற்றி வேற்கை | விநாயகர் |
| **4.** சைவசமயம் | விபூதி, உருத்திராட்சம் |
| **5.** விழுமியம் | அதிவீரராம பாண்டியன் |

(5 × 2 = 10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

❖ **பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.**

| |
|---|
| குரு, உதவிகளை, குடும்ப அங்கத்தவர், சூரியன், பண்ணுடம் பக்தியும் |

1. நாம் தினமும் …………………… உதிப்பதற்கு முன் நித்திரை விட்டெழுதல் வேண்டும்.
2. இறைவழிபாட்டின் போது …………………… அனைவரும் ஒன்றினைந்து வழிபாட்டினை மேற்கொள்ளல் சிறப்பானது.
3. நாம் கனம் பணணவேண்டிய பெரியோர்களில் ……......... முதன்மையானவர்.
4. திருமுறைப்பாடல்களை ……………………….. பாடவேண்டும்.
5. நாம் சிறுவயதிலிருந்தே பெற்றோர்களுக்குத் தேவையான …………………. செய்து பழகவேண்டும். *(5 × 2 = 10 புள்ளிகள்)*

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1)** பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினைப் பிழையற வரிக்கிரமமாக எழுதுக. அவற்றைப் பாடியவர் பெயர், பாடிய தலம் என்பவற்றையும் எழுதுக.

I. இடரினுந்தளரினும் II. ஓசை யொலியெல்லாம் III. பித்தா பிறைசூடி

*(4 + 1 + 1 × 2 = 12 புள்ளிகள்)*

**2)** " பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்"

I. மேற்கூறிய கூற்று யாரால் கூறப்பட்டது? இக்கூற்று எந்த நூலில் உள்ளது.
II. விநாயகரை வழிபடும் இடங்கள் 4 தருக.
III. விநாயகருக்கு வழங்கும் மறுபெயர்கள் 4 தருக. *(3 × 4 = 12 புள்ளிகள்)*

**3)** "சைவசமயத்தவர்கள் வாழும் இடம் சைவஇல்லம் எனப்படும்"

I. நாம் அன்றாடம் கடைப்பிடிக்கும் சைவப்பழக்கங்கள் 4 தருக.
II. பஞ்சபுராணம் ஓதும் முறையை ஒழுங்காக எழுதுக.
III. விசேட தினங்களில் நாம் கடைப்பிடிக்கும் சைவப்பழக்கங்கள் 4 தருக.

*(3 × 4 = 12 புள்ளிகள்)*

**4)** "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

I. நாம் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியங்கள் 4 தருக.
II. பெரியோர் என அழைக்கப்படுவோர் யார்?
III. பெரியோர் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் 4 தருக. *(3 × 4 = 12 புள்ளிகள்)*

**5)** "அரிது அரிது மானிடராதல் அரிது"

I. திருநீறு அணியும் இருவகை முறைகளையும் எழுதி சுருக்கமாக விளக்குக.
II. திருநீறை எத்திசைநோக்கி எவ்வாறு தரிக்க வேண்டும்?
III. நாம் ஒவ்வொருவரும் யாருக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும்? *(3 × 4 = 12புள்ளிகள்)*

**6)** " நன்றி மறப்பது நன்றன்று"

I. நன்றி மறவாமை தொடர்கள் இடம்பெறும் 2 திருக்குறல்கள் .எழுதுக.
II. நன்றிமறவாமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்கள் யார்?
III. கிளி இந்திரனிடம் கேட்ட வரம் யாது? *(3 × 4 = 12 புள்ளிகள்)*

**7)** பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

I. சைவ இல்லம்
II. விநாயகர்
III. உண்மை பேசுவோம்
IV. பெரியோரைக்கனம் பண்ணுதல்

*(2 × 6 = 12 புள்ளிகள்)*


kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page